தரம் 10 11

O/L

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## சுவரொட்டி

ZOOM ONLINE CLASS

சரியான றைத்

தெ யுங்கள்

TUTE 41




The Best TAMIL ACADEMY
அகரம்
தினேஸ் ONLINE ACADEMY

REGISTER NOW 0778054232

தமிழ் ஆசான்
"அகரம் தினேஸ்"
SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

05 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

**சுவரொட்டி**

சுவர்களில் ஒட்டப்படுவதால் இதனை சுவரொட்டி எனப்படும். மக்களுக்கு தகவல்களை வழங்குவதற்காக ஒட்டப்படுகின்றது. துண்டுபிரசுரம் போலவே காணப்பட்டாலும் இது பிரசுரிக்கப்படாமல், சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கும்.

**சுவரொட்டியில் அமைய வேண்டியவை**

- பொருத்தமான தலைப்பு
- பொதுத்துறை சார்ந்தவையாக காணப்படல்
- பொதுவான விழிப்பு
- கவர்ச்சியான மொழிநடை
- மகுடவாசகங்கள் கவர்சியானதாக காணப்படல்.
- பெரிய எழுத்துக்களால், மக்களை கவரக் கூடிய நிறங்களில் அமைதல்.
- நிழற்படங்கள், ஓவியங்கள் ஆகியவற்றைப் பயன்படத்தல்.
- கருத்துப்படங்கள், கேலிச்சித்திரங்கள் முதலியவற்றை பொருத்தமாக பயன்படுத்தல்.
- குறியீட்டுப்பாங்கில் விடயத்தை மக்களுக்குப் பரப்புதல்.
- திகதி, நேரம், இடம் போன்றவை.

**சுவரொட்டிகள் வெளியிடப்படும் துறைகள்**

- பொதுத்துறை சார்ந்தவை
- அரசியல் சார்ந்தவை
- பொருளாதாரம் சார்ந்தவை
- விளம்பரங்கள் சார்ந்தவை
- சுகாதாரத்துறை சார்ந்தவை

AGARAM DHINES

**மாதிரி சுவரொட்டி**

**செயலமர்வு**

தலைப்பு : க.பொ.த சாதரண தர மாணரவர்களுக்கான தமிழ் செயலமர்வு

தமிழ் மொழியில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள இன்றே எம்முடன் இணையுங்கள், உங்கள் வெற்றியை உறுதிப்படுத்துங்கள்.

நாளைய வெற்றியின் பங்குதாரர்களே, உம்மை உயர்வடையச் செய்ய நாங்கள் தயார்.

இடம்: கண்டி, பாரதி மத்தியக் கல்லூரி, பிள்ளையார் கோவில் தெரு


திகதி : 2025.06.03 நேரம்: காலை 09.00 மணி

ஆசிரியர்

அகரம் தினேஸ்

உங்கள் அனைவரின் வருகையால் செயலமர்வு மேலும் சிறப்படையும்




சாலைப் பாதுகாப்பு
சுவரொட்டிப் போட்டி
பங்கேற்போர் -
• பாடசாலை தரம் 6 - 9
• பாடசாலை தரம் 10 - 13
உள்ளடக்கம் - சாலைப் பாதுகாப்பின் எந்த ஒரு அம்சத்தையும் முன்னிலைப்படுத்தும் வகையில்
சுவரொட்டி அளவு - A3 (297*420mm/11.7*16.5)
நோக்குநிலை - சுவரொட்டி முறை / லான்ட்ஸ்கேப்
வடிவம் - டிஜிட்டல் மீடியா (அனிமேசன் காணொளிகள் மற்றும் டிஜிட்டல் சுவரொட்டிகள்) அல்லது கையால் வரையப்பட்டது.
சமர்ப்பித்தல் - டிஜிட்டல் வடிவத்தில் மற்றும் கையால் வரையப்பட்ட வடிவத்தில் , இறுதியாக சமர்பிக்கும் சுவரொட்டி "JPEG படம்" வடிவத்திலும் காணொளிகள் MP4 வடிவத்திலும் அமைய வேண்டும்.
அகில இலங்கை போட்டியில், ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள்
• முதல் இடம் மடிக்கணினி (laptop)
• இரண்டாவது இடம் – Tab
• மூன்றாவது இடம் – ஒரு வருடத்திற்குகான இலவச இணைய இணைப்பு.
• ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் சிறந்த 50 நுழைவுகள், மற்றும் வெற்றியாளர்கள், தேசிய கண்காட்சிக்கு தகுதி பெறுவார்கள்.
• 3 சிறந்த சுவரொட்டிகள் வெகுஜன ஊடகங்கள் மற்றும் போக்குவரத்து அமைச்சு மூலம் விளம்பரம் பெறும்.
• பங்கேற்பாளர்கள் அனைவரும் சான்றிதழ் பெறுவார்கள்.
தேவையான தகவல்கள் - பெயர், வயது, பாடசாலை, தரம், மாகாணம், பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயர்
இறுதி தேதி - 30 செப்டம்பர் 2021
மேலதிக விபரங்களுக்கு வார இறுதிப்பத்திரிகைகள் மற்றும் www.surgeons.lk இணையதளத்தை நாடவும்
மேலும் விசாரணைகளுக்கு - traumacssl@gmail.com / 011-2695080
இலங்கையின் அறுவை சிகிச்சை நிபுணர்களின் விபத்து குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டது.
கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது.
අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION